விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 வைகாசி 31 ரம்ழான் 23 இதழ் 123
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13 6 1985

இலங்கை இனப் பிரச்னை

## ஜனாதிபதியின் தூதுக்குழு நாளை புதுடில்லி செல்கிறது

(கொழும்பு)

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் விசேட தூதுக்குழு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை புதுடில்லி செல்லவுள்ளது.

இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்திக்கும், இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுக்குமிடையில் புதுடில்லியில் நடைபெற்ற உச்சிமாநாட்டு விடயங்கள் சம்பந்தமாகத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவே இக்குழு புதுடில்லி செல்கின்றது.

திரு. எச். டபிள்யு. ஜெயவர்த்தனா, திரு. பீலிக்ஸ் அபேசிங்க, திரு. எச். எல். டி. சில்வா, திரு. எல். சீ. செனவிரத்ன ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுவதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ரா)

# மூதூரில் கண்ணிவெடி தாக்குதல்

# 4 இராணுவம் 1 பொலிஸ் பலி!

## தெகிவத்தையில் 14 சிங்களவர் கொல்லப்பட்டனர்

(திருகோணமலை)

**திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் பகுதியில் நேற்றுக் காலை தீவிரவாதிகளினால் வீதியில் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் நான்கு இராணுவத்தினரும் ஒரு பொலிசாரும் பலியாகியுள்ளனர் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.**

இதேவேளை மூதூரிலிருந்து 12 மைல் தெற்கேயுள்ள தெகிவத்தை என்ற கிராமத்தில் நேற்றுமுன்தினம் தமிழ்த் தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 14 சிங்கள மக்கள் பலியாகியுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது இச்சம்பவத்தில் ஒரு தமிழ்தீவிரவாதி ஆயுதப் படையினரால் கொல்லப்பட்டார். இதே கிராமத்தில்தான் கடந்த மாதம் 31-ம் திகதி தீவிரவாதிகள் 5 சிங்களவர்களைக் கொன்றுள்ளனர்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் தெகிவத்தை கிராமத்தில் தாக்குதலை மேற்கொண்டு 14 சிங்களவர்களை கொன்றதாகவும் இச்சம்பவம் இடத்திற்கு மூதூர் நீதவான் கதிரவேற்பிள்ளையையும், மூதூர் வைத்திய அதிகாரி யோகநாதனையும் இராணுவத்தினரும் பொலிஸாரும் நேற்றுக்காலை கவச வாகனங்களில் கூட்டிச் சென்றபோது மூதூருக்கும் தெகிவத்தைக்குமிடையில் வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் பாதுகாப்பு படையினர்சென்ற வாகனம் ஒன்று தாக்கப்பட்டதாகவும் இச் சம்பவத்தில் 4 இராணுவத்தினரும் 1பொலிஸாரும் கொல்லப்பட்டதாகவும் அரசு தெரிவித்தது.

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி மருந்துகள் காங்கேசனில் கிடக்கின்றன

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கான மருந்துகள், ஊசிமருந்துவகைகள் கப்பல்கள் மூலம் அனுப்பிவைக்கப்பட்டபோதிலும் 'கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையில் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் உள்ள பாதுகாப்பான இடத்தில் முடங்கிக் கிடப்பதாக ஆஸ்பத்திரி வட்

(6ம் பக்கம் பார்க்க)

## 5 பேர் பொலிஸாரால் சுட்டுக் கொலை!

(யாழ்ப்பாணம்)

தீவிரவாத இயக்கமொன்றைச்சேர்ந்தஐந்து பேர்பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இங்கினியாகலையில் இச்சம்பவம் நடைபெற்றது. இங்கினியாகலை என்னுமிடத்தில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட

[6-ம் பக்கம் பார்க்க]

அநுராதபுரத்தில்

## மினிபஸ் பிரயாணிகளை ஊர்காவல்படை சோதனை

### ஒரு தமிழ் இளைஞர் விசாரணையில்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை அனுராதபுரம் வந்து சேர்ந்த மினிபஸ்ஸில் இருந்த பிரயாணிகள் அனுராதபுரம் ஊர்காவல் படையினரால் கடும்சோதனைக் குட்படுத்தப்பட்டதுடன் அதிலிருந்த ஒரு தமிழ் இளைஞரை விசாரணைக்காகஅழைத்துச்சென்றனராம்.

விசாரணைகளெனக் கொண்டு செல்லப்பட்ட குறிப்பிட்ட தமிழ் இளைஞர் நிலைபற்றி இது

(6-ம் பக்கம் பார்க்க)

## கச்சேரி ஒய்வூதியம் கோட்டையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் ஒய்வூதியம் பெற்றுவந்தவர்களுக்கு இம்முறை யாழ் கோட்டைக்குள் அமைக்கப்பட்ட இலங்கை வங்கிக்கிளையில் வைத்து ஒய்வூதியப்பணம் வழங்கப்படவுள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு கருதி அரிசி மூடைகள் நாவற்குழியில்

(யாழ்ப்பாணம்]

குருநகரிலுள்ள யாழ் உணவுக்களஞ்சியத்திலிருந்து கொள்ளை அடிக்கப்பட்ட அரிசி மூடைகளில் சில மீண்டும் அங்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இவ்வுணவுக் களஞ்சியத்தில் இருநாட்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தைத் தொடர்ந்து மீதியாக இருந்த சுமார் இரண்டாயிரம் அரிசி

(6ம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரிகளில் தாதிமார் போர்க்கொடி

[கொழும்பு]

அரசினர் ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் தாதியர்கள் மூன்று கோரிக்கைகளை முன் வைத்து சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## வன்செயல்களை நிறுத்த 'புலிகள்' இயக்கம் மறுப்பு- அல்விஸ்

(கொழும்பு)

இலங்கையில் எழுந்துள்ள இனப்பிரச்னைக்கு ஓர் அரசியல் தீர்வைக் காணுவதற்கு ஏதுவாக வன்செயல் நடவடிக்கைகளை நிறுவுவதற்கு ஏனைய தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் உடன்பட்டபோதும் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' இயக்கம் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது என்று ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் தலைமையிலான புலிகள் இயக்கம் இனிமேல் தொடர்ச்சியான தாக்குதலை நடத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது இதற்காக நாடு முழுவதிலும் பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இதுசம்பந்தமாக தேசியபந்தோபஸ்து

[6ம் பக்கம் பார்க்க]

## பெற்றோல் இன்றும் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தனியார் வாகனச் சொந்தக்காரர்களுக்கு ஒரு வாகனத்துக்கு 5 லீற்றர் வீதம் பெற்றோல் இன்றும் வழங்கப்படவுள்ளது.

தேசிய பாதுகாப்பு நிதி

## சிங்களவரை குடியேற்ற பயன்படுத்தப்படும்

[கொழும்பு]

தேசிய பாதுகாப்பு நிதிக்கு திரட்டப்பட்ட 4 கோடி ரூபாவில் 50லட்சம் ரூபா தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களை குடியமர்த்தும் திட்டத்துக்கு செலவுசெய்யப்படவுள்ளது.

இந்தப்பணம் தமிழர் பகுதிகளில் குடியேறும் சிங்களவருக்கு வீடுகளை அமைக்கவும், நிதிவசதிகளை வழங்கவும் அவர்களுக்கு ஆயுதங்களை வாங்கவும செலவுசெய்யப்படவுள்ளது.

மிகுதி 3கோடி 50 லட்சம் ரூபா பணமும் நிரந்தரவைப்பில் இடப்பட்டு அதிலிருந்து வரும் வட்டிப்பணம் ஏனைய சில தேவைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

## உறுதியான அரசியல் தீர்வை அரசு எடுக்கவேண்டும்! இ.தொ.கா. அறிக்கை

(கொழும்பு)

இலங்கை தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்வதற்கு உறுதியான அரசியல் தீர்வு ஒன்றை எடுப்பது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும்'' என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது!

நாட்டில் நிரந்த அமைதி ஏற்படுவதற்காக இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படல் வேண்டும். அதே வேளை கண்மூடித்தனமான

[6ம் பக்கம் பார்க்க]

# அரி வி ளம்பரம்

## விற்பனைக்கு

வெலிங்டன் தியேட்டருக்கு அருகாமையில் கிணறு, மதில் ஆகிய வசதிகளுடன் இரண்டு பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சாயி றைகிளீனேர்ஸ், (வெலிங்டன் சந்தி), 52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [3763]

240 மொடல் புதிய உழவு இயந்திரமும் பெட்டியும் (ரெயிலர்) விற்பனைக்கு உண்டு க. கதிரவேலு, 451, இராமநாதபுரம், கிளிநொச்சி. [3756]

கண்டிக்குளியில் தேக்கு அலுமாரி கண்ணாடியுடன் (3850/-) மேசைகள், பீங்கான் கோப்பைகள், T V. அத்துடன் வீடு, காணி விற்பனைக்குண்டு தொடர்பு: பைலட் இன்ஸ்ரிரியூட், 151, செம்மணி றோட், நல்லூர். [3750]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பர் பொன்னையா என்பவரின் மரணசாதனமில்லா சொத்தின் விடயத்தில்

-மரணமெய்தியவர்

மரணசாதன )

இல. 3512

நியாயாதிக்கம் )

பொன்னையா பழனிமலை ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம்.

-மனுதார்

மேற்குறித்த இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேற்குறித்த இறந்தவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காகவும் வழக்குப் பாதுகாவலரை நியமிப்பதற்கும் இந்நீதிமன்றிற் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1985ம் ஆண்டு மாசி மாதம் 22ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றிற் தோன்றி அவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தாற் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு தை மாதம் 4ம் திகதி.

கு. குலசிங்கம்
பதிவாளர்,
யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றம்.

காரணம் காட்டும் திகதி 14-6-1985க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்
பதிவாளர்.

W. S. செந்தில்நாதன்
மனுதாரின் சட்டத்தரணி
3733

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 6 Sri Volkswagon [1300] கார் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: 32, கச்சேரி-நல்லூர் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 3746

## கமிஷனுக்கு

யாழ் சின்னக்கடைச்சந்தை கிழக்கு வீதியில் நல்ல நிலையில் நடைபெற்று வரும் பலசரக்குக் கடை ஒன்று கமிஷனுக்குக் கொடுக்கப்படவுள்ளது. தொடர்பு: திரு. B. C. பாலசிங்கம், இல. 3, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 3739

## தேவை

மாநகர எல்லைக்குள் வசிப்பவரும் 20 வயதுக்கு மேற்படாத ஆண்கள். 20-6-85க்கு முன் விண்ணப்பிக்கவும். கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். [3767]

பெண்கள், குழந்தைகளுக்கான உடைகளை வெட்டித் தைப்பதில் அனுபவமுள்ளவர்களுக்கான வெற்றிடங்கள் இருக்கின்றன. எழுத்துமூலம் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு தேதி: 23-6-85. கிளீன் கட் (Kleen Khut), 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 3754

## WANTED

Private Secretary to the Bishop. with competence in English Short Hand and Type writing, for immediate appointment. Apply to: The Secretary, J.D., C.S.I., Bishop's Office, Vaddukoddai. 3760

Vacancy exists for a female English typist in our organisation in Jaffna Town. Applicant should have minimum two years experience in Typing and fluent knowledge of English. Apply before23-rd instant Advi. No. 3753.C/oEelanadu. 3753

## வைத்தியம்

நாட்பட்ட மனநோய், காக்கைவலி, சர்மரோகங்கள், கான்சர், கழலை கட்டிகள், அல்சர்களுக்கு உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் எம். வி. தில்லைசந்திரன் (Registered Homoeopath), 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 3717

நடராசாவும் சபாநாதனும்
சட்டத்தரணிகள்,
வட்டுக்கோட்டை.

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

இல. தத்துவம்/237

பொன்னாலையைச் சேர்ந்த காலம்சென்ற சின்னப்பு பொன்னம்பலம் என்பவரது மரணசாதனம் இல்லாத சொத்துக்களின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயத்தில்

-மரணமெய்தியவர்

பொன்னம்பலம் கைம்பெண் ஆச்சிமுத்து,
பொன்னாலை, சுழிபுரம்.

மனுதாரர்

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆனி மாதம் 26ஆம் நாளன்று 9 முற்பகல் மணிக்கு இந்த நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1985ம் ஆண்டு பங்குனி மாதம் 26ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்,
மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்.
3735

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## காணவில்லை

சுண்ணாகம் மயிலணி வீதியில் உள்ள திருமதி இ. மண்டலநாயகத்தின் வீட்டில் வேலைக்கு நின்ற 18 வயது நிரம்பிய மூர்த்தியைக் காணவில்லை. மூர்த்தி காணாமல் போனதையிட்டு வீட்டுக்காரர் மிகவும் மனம் வருந்துகின்றனர். இவர் பற்றித் தகவல் தெரிந்தால் தயவு செய்து கீழ் கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்:

திருமதி இ. மண்டலநாயகம்,
[3766] 18/3, மயிலணி ஒழுங்கை, சுண்ணாகம்.

## கனடா பிரயாணம்

கனடாவுக்கு விசாவுடன் பிரயாண ஒழுங்கும், பாஸ்போட், பொண்ட் என்பனவும் செய்து தரப்படும்.

தொடர்பு:

எஸ். கே மகேந்திரன்,
(சட்டத்தரணி)
24, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 24031 (3761)

## VACANCY

### LECTURER IN COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING

Dyn. Ads

An excellent opportuninty exists for persons holding a recognised degree, diploma or an equivalent qualification to join our Institute which has a fast expanding computer section. The job will be most interesting and rewarding to the right candidate. Salary is negotiable.

Suitable candidates should send-in their applications to us in advance and CALL OVER FOR AN INTERVIEW ON THE 21-ST JUNE 1985 between 9 a.m. and 12 noon.

Director,
Jaffna College
Technical Institute,
Vaddukoddai.

## வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா, ஒல்லாந்து செல்வதற்கான
சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான
சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி
செய்து கொடுக்கப்படும்.
ஞாயிறு முதல் வியாழன் வரை

PRASAD REST,
11-Ubatissa Road,
BAMBALAPITIYA. PHONE 587855

வ. நல்லையா
அளவெட்டி, வடக்கு,
அளவெட்டி
[3747]

## COLOMBO - BERLIN பிரயாணம்

17, 21, 24ந் திகதிகளில் பிரயாணம் செய்பவர்கள் உடனடியாகப் பதிவுசெய்துகொள்ளவும்.

முன்பணம் அவசியமில்லை.

கொழும்பில் தங்குமிட வசதி, மற்றும் பாஸ்போட், பொண்ட், விஸா, பிரயாணக் காசோலைகள் பெறுவதற்கான உதவிகள் செய்துகொடுக்கப்படும்.

லிப்ரூஸ் லிமிட்டெட்,
R. G. பில்டிங், 70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

COLOMBO

LIBRAS LTD.
PAUL VI CENTRE,
24. FRONT STREET,
COLOMBO-1

## அறிவித்தல்

### GLOBE INDUSTRIES

மீண்டும் எமது ஸ்தாபனம் 4-ம் குறுக்குத்தெருவில் வேம்படி வீதி வந்து சந்திக்கும் சந்தியில் புதிதாக அமைந்துள்ள கட்டிடத்தில் இன்று (13—6—85) ஆரம்பமாகிறது என்பதை எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம். தற்போதைய நாட்டு நிலைமையைபடுத்து எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது தனிப்பட்ட அழைப்பிதழ் தந்து வரவேற்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

GLOBE INDUSTRIES,
12, 173, 4th CROSS STREET, JAFFNA. Phone: 23187 (3757)

### மணிவாக்கு

புலன்காற்று உறுதியற்ற மரத்தை அடித்து வீழ்த்துகிறது. மலை ஒன்றை ஒன்றும் செய்யாது. ஆசையை அகற்றி, அளவுடன் அருந்தி, புலன்களை வென்ற மலை போன்ற மனிதனை புலன்காற்று ஒன்றும் செய்யாது.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## மாணவர்களும் அதிபர்கள் ஆகவேண்டும்

நாம் பாதுகாக்க வேண்டிய பொருளைவிட நம்மைப்பாதுகாக்கும் கல்வி உயர்ந்தது என்கிறார் தமிழ் மறை முனிவர் திருவள்ளுவர்.

கல்வி எம்மைப் பாதுகாக்கும் என்பதை உணராத படியால்தான் இன்று பாடசாலைகள், அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பாதுகாப்புப் பற்றி அதிகம் விசனப்படவேண்டியிருக்கிறது.

இந்தச் சிந்தனையுடன் அண்மையில் யாழ். கல்வித் திணைக்களம் பாடசாலை அதிபர்களுக்கு நடத்திய சேவைக்கால வகுப்பை அணுகும்போது, இந்நாட்டுக்கு இன்றைய அரசு வகுத்த புதிய கல்வித் திட்டம் பற்றி அங்கு அதிகம் பேசப்பட்டிருப்பது கவனத்துக்குரியதாகிறது.

ஒவ்வொரு ஆட்சியிலும் கல்வி பற்றிய கருத்துக்கள் ஒரு புதிய திட்டம் என்ற வடிவில் தோன்றுகின்றன. ஆட்சி மாற காலையில் பூத்த ரோசா மாலையில் மடிவது போல் மடிகின்றன.

புதிய திட்டம் என்பதால் பழைய திட்டம் மடிந்தது சொல்லாமல் சொல்லப்படுகிறது

திட்டங்கள் மாண்டு மடியலாம்; கல்வியைப் பற்றிய கருத்துக்கள் மாற்றம்அடையலாம். 'கல்வி' 'கற்றவன்' என்ற பதங்களுக்கு அடிப்படைக் கருத்து என்றும் நின்று நிலைப்பதாலேயே, சமூகம் கற்றவனை என்றும் இனங்காண முடிகின்றது.

'கற்றவர் காய்வது காமனையே' என்ற தேவார அடியை செவ்வனேவிளங்க, மற்றவர்களுக்கு விளக்க முடியுமானால் இன்றைய நவீன ஆராய்ச்சி அனைத்தும் அதில்காணப்படுகிறதென்ற முடிவு திருப்தி அளிக்கிறது.

தேவாரம் என்பது தெய்வ வாக்காக இருக்கலாம்; தெய்வ வாக்குத் தானும் கல்விகற்கும் மாணவன் தானாகவே ஆராய்ந்து உண்மையென்று ஒப்புக்கொள்ள வேண்டும். அந்த ஆய்வுதான் உண்மையான 'கல்வி' என்பதைக் குறிக்கும்

எனவே 'காமனைக் காய்வது' தன்னிறைவு கொண்ட பதமென்பதால் அதனை நாம் தெரிந்து குறிப்பிட வேண்டியிருக்கிறது; சம்பந்த சுவாமிகளிலோ அல்லது அவரின் தமிழிலோ கொண்ட மோகத்தால் அல்ல என்றறிக.

இன்றைய அரசின் கல்வித் திட்டமென்னவானாலும் நாம் குறிப்பிடும் கருத்து அதிபர்கள் பங்கு பற்றிய சேவைக்கால வகுப்பில் இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

அதிபர்கள் மாணவர்களாக மாறின அனுபவம் மிக அபூர்வமானது; மாணவர்கள் அதிபர்களாக ஆளுமையுடைய மனிதர்களாக உயர இந்த மாற்றம் உதவ வேண்டும்.

இன்று பாடசாலைக்கட்டிடத்தை தளபாடத்தை எவ்வாறு பாதுகாக்கலாம் என்று ஏங்கும் வேளையில் 'காமனைக்காய்வது' பற்றிப் பேசுவது மனநோயின் குணம் என்றும் கொள்ளலாம்.

கற்றவர்கள் காமனைக் காயும் முயற்சியில் ஒருவித வெற்றி கண்டாலும் உண்மையில் அவர்கள் இன்று மனநோயால் தாக்குண்டு தவிப்பது தவிர்க்க முடியாத நிலை,

நாட்டை விட்டு வெளியேறும் மாணவர்களும், பெற்றோரும் என்னென்ன சங்கடத்துக்குள்ளாகின்றனர் என்பது ஒரு கவலை.

பாதுகாப்பற்று இங்கு வாழும் மாணவர்களுக்கு என்ன கதி என்று அவர்கள் நினைப்பதில்லை; அதுவும் இன்னொரு கவலை.

இந்த இரு குழுவினரில் எவர் பரிதாபத்துக்குரியவர்? இருவரும் தானே?

இன்றைய கல்வி உருவாக்க முயல்வது ஒரு நல்ல மனிதனை அல்ல. ஒரு திறமையுடைய பொறியியலாளர், டாக்டர், கணக்காளர், தொழில் நுட்ப வல்லுநர், தொழில் (பாடசாலையிலல்ல) அதிபர் போன்ற அதிபர்களையே. இவ்வித அதிபர்கள், தம் திறமையை ஆரம்பத்திலேயே வளப்படுத்திக் கொள்ள பாடசாலை ஒரு போட்டிநிலையம்ஆகின்றது. பூரணப்படும் விவேகமுடைய நல்ல மனிதர் உற்பத்திக்கு இங்கு இடமில்லை.

படித்து சிறந்த தொழில் பார்த்து சமூகத்தில் சிறப்புப்பெற்று, பெரிய (நல்ல என்றல்ல) மனிதனாக, பெரிய குடும்பத்தில் விவாகஞ்செய்து உயர்ச்சியடைய உதவும் கல்வியே மாற்றமடையும் எல்லாத்திட்டங்களும உதவ முயல்கின்றன; எனவே ஈற்றில் மடிகின்றன.

'உபநிடதம்' என்பது ஒன்றாய் இருத்தல் என்று கருத்துக்கொண்டது. மாணவனும் ஆசிரியனும் ஒன்றியிருந்து, காதலர் இருவர் போல காமனைக்காயமுயற்சி செய்தலே உண்மைக்கல்வி.

விருப்பு வெறுப்பின்றி உடன் இருந்து ஆராய்ந்து அவ்வித பயிற்சியில் ஊறி, தனக்கும் தன் சமூகத்துக்கும் உழைக்க, அவ்வித உழைப்பால் சமூகத்தைப் பாதுகாக்கஉதவும கல்வியே இன்று எமக்குத் தேவையானது.

நிர்வாகம் எவ்வாறு மாற்றம் அடைந்தாலும் மாணவரில் கலைஞானம் தோன்றுவதற்கு ஆசிரியர் உதவ வேண்டும். கற்பிக்கும்முறையிலும் பார்க்க ஆசிரியரின் பூரணப்பட்ட வாழ்வு வகுப்பறையில் அதி அறபுதம் செய்யவல்லது.

## பனை அபிவிருத்திச் சபையும் செயற்பாடுகளும்

பனை அபிவிருத்திச்சபையும் பல்கலைக் கழகமும் இணைந்து பல்கலைக் கழக மூலகக் கட்டிடத்தில் இன்று முதல் மூன்று நாட்களுக்கு நடத்தவிருக்கும் கண்காட்சியையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது. இதன் தொடர்ச்சி நாளை வெளிவரும்.

கலாநிதி சு. மோகனதாஸ்

எமது வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு, உறைவிடம் ஆகிய இரண்டு தேவைகளையும் பனைவழங்குவதால் அதன் பயன்பாடு தமிழ் மக்களின் வாழ்க்கையோடு தொன்றுதொட்டுப் பின்னிப்பிணைந்து விளங்குகின்றது. தேயிலை, ரப்பர், தென்னை போன்ற பெருந்தோட்டப் பயிர்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் போன்று பல வருடங்களுக்கு முன்னரே பனைக்கும் அரசாங்க உதவிகள் கிடைத்திருக்குமானால் இன்று பனைவள அபிவிருத்தி பலமடங்காகப் பெருகி இருக்கும். எனினும் பனையின் முக்கியத்துவத்தை உணர்ந்த அரசாங்கம் 1978ம் ஆண்டு பனை அபிவிருத்திச் சபையை உருவாக்கியது

ஆரம்பத்தில் இச்சபைக்கென ஒதுக்கப்பட்ட நிதியான பத்து மில்லியன் ரூபாவைக் கொண்டே 1964ம் ஆண்டு வரை சபை இயங்கவேண்டியிருந்ததால் இந்நிலையைக் கொண்டே பனை அபிவிருத்திக் காலசெயற்பாட்டைப்பூரணப்படுத்த முடியாத நிலையிலிருந்தது; 1985ம் ஆண்டு 4மில்லியன் ரூபாவை அரசாங்கம் சபைக்கு ஒதுக்கீடு செய்ததன் மூலம் பனை அபிவிருத்தியை ஊக்குவித்துள்ளது. இந்நாட்டில் 60 000 ஏக்கரில் 10 மில்லியன் பனைமரங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் (கிளிநொச்சி உட்பட) 7 மில்லியன் பனை மரங்கள் உள்ளன. மன்னார், முல்லைத்தீவுப்பகுதிகளில் அடர்த்தியாகவும், திருக்கோணமலை, புத்தளம், வவுனியா, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில்குறைந்தளவு பரம்பலைக்கொண்டதாகவும் பனை மரங்கள் காணப்படுகின்றன.

### ஐந்து பிரதான நோக்கங்கள்

ஐந்து பிரதான நோக்கங்களைக்குறிக்கோளாக கொண்டு பனைஅபிவிருத்திச்சபை செயற்பட்டு வருகின்றது அவையாவன: 1. பனஞ் செய்கையை மேம்படுத்தலும் உற்பத்தித் திறனை அபிவிருத்தி செய்தலும், 2. பனம்பொருள் உற்பத்திகளை ஊக்குவித்தலும், பதனிடும் முறையை நவீனப்படுத்தலும்- வினைத்திறனை அதிகரித்தலும், 3. பனம் பொருட்களைச் சந்தைப்படுத்தலும் ஏற்றுமதிக்கான நடடிக்கைகளை மேற்கொள்ளுதலும், 4. பனைவள ஆராய்ச்சி நிலையற்கைநிறுவுதலும், பனம் பொருட்களைப் பதனிடல், பயன்படுத்தல் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ளுதலும். 5. தொழில் நுட்பத் தன்மை வாய்ந்த சகலவிடயங்களிலும் பனந்தொழிலுக்கு வழிகாட்டி மதியுரை வழங்கலும், பயிற்சியளித்தலும்.

இக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குச் சபையின் செயற்பாடுகள் உற்பத்தி, அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி, நிர்வாகம் என்ற ஐந்து பிரிவுகளாக்கப்பட்டுள்ளன. பனம் பொருட்களைப் பரீட்சார்த்தமாகத் தயாரிப்பதையும், உற்பத்திக்கான பயிற்சி அளித்தலையும், உற்பத்திப் பிரிவு மேற்கொள்ளுகின்றது. தற்போது பண்டைய முறையில் பனம் பழத்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட தயாரிப்புக்களைப் பரீட்சார்த்தமாக நவீனமயப்படுத்தியும், புதிய உற்பத்திகளை அறிமுகம் செய்தலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## அறிஞர் ஜேம்ஸ் ரி. இரத்தினம்

பேராசிரியர் கா. இந்திரபாலா

ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் இன்று எண்பது ஆண்டுகளைத் தாண்டுகிறார். இப் பதிற்றெண் வருடங்களும் நவீன ஸ்ரீலங்காவின் சரித்திரத்திலே மிக முக்கியத்துவம் வாய்ந்த காலமாகும். கடந்த சில நூற்றாண்டுகளுள்ளும் இக்காலம் அடிப்படைக் கோட்பாடுகளிலே மாறிய மிக்க வேகத்திலே மாறிய-ஈற்றிலே மனதையே புண்படுத்தும் கவலைக்கிடமாக மாறிய, பல மாற்றங்கள்விளைந்த காலமாகும்.

ஜேம்ஸ், என்றும் போதிக்கும் ஒரு கொள்கை யாதெனில், ஒருவர் தன் கரிசனைக்கென தேர்ந்தெடுக்கும் எந்தப் பகுதியாயிருந்தாலும் ஈற்றில் அப்பகுதி சரித்திரத்திலேயே முடிவுறும் என்பதே அவர் சரித்திரத்திலே கொண்ட ஆர்வம் பிற்காலத்தில் தோன்றிய தொன்றன்று. இலங்கைப் பல்கலைக் கலாசாலையிலும், சட்டக் கலாசாலையிலும் இருக்கும் போதே முதலில் சரித்திரத்தில் ஈடுபடத் தொடங்கினர். சட்டக் கலாசாலையில் சரித்திர ஆராய்ச்சியில் அவர்கொண்ட நாட்டம் விஷேடமாய்க் கவனிக்கப் பெற்றது. ஸ்ரீலங்காவில் மத்தியஸ்தர் குழுவினால் வழக்கு விளக்கத்தைப்பற்றி ஓர் 'முன்னுரை' என்னும் பொருள்பற்றி அவர் எழுதிய தனிக்கட்டுரை சட்ட ஆராய்ச்சிக்கென உவோல்டர் பெரேரா ஞாபகப்பரிசைப் பெற்றது இதுவே சரித்திர ஆராய்ச்சியில் அவரின் முதலாவது முக்கிய ஆராய்வாகும்.

இக் காலத்தில்தான் அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரனின் வாழ்க்கையிலும், நூல்களிலும் ஆர்வம் காட்டினரென நம்புகிறேன் ஜேம்ஸ் பல்லாண்டுகளாய் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் சேகரித்தவற்றுள் ஜோன்ஸ்ரனைக் குறித்துள்ள ஆய்வுக்கட்டுரைகளே மிகமுக்கியத்துவம் வாய்ந்தவை.

இளம் பிராயத்திலேயே ஜேம்ஸ் வம்சாவழிகளைக் காண்பதல் மிக்க ஆர்வம் கொண்டார். குடியரசுக்காலப் பகுதியில் விளங்கிய ஸ்ரீலங்கா மேதைகள் பலரினதும் குடும்ப வரலாறுகள் நன்கு ஆராய்ந்து அவர்களைப் பற்றிய பல சுவையான சேதிகளை வெளியிட்டார். சில சமயங்களில் செருக்குற்ற அவ் வம்சாவழியினருக்கு இவை தொல்லையாயும் அமைந்தன அவர் இவ் வம்சாவழி வரலாறு ஆய்வில் வல்லுனராய் விளங்கியமையால் பலர் தத்தம் குடும்ப வம்சத்தைத் தேடுவதற்கு அவரை நாடினர்.

வம்சாவழி வரலாற்றிலிருந்து வாழ்க்கை வரலாற்றுக்குச் செல்வது இயல்பே. இந்நாட்டுப் பத்திரிகைகளுக்கு முதன்மையான அரசியல் வாதிகளைப்பற்றியும் ஆங்கிலக்குடியரசுப் பரிபாலகர்களைப் பற்றியும் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகளைக் கிரமமாய் எழுதினர். விரைவில் தேசியத் தலைவர்களின் வாழ்க்கைகளைப் பற்றிய வரலாறுகளுக்கு ஓர் அதிகாரியாகத் திகழ்ந்தார். அவரது அரசியல் நட்பறிஞராய்த் திகழ்ந்தசேர் பொன்னம்பலம் அருணாசலத்தின், 1953-இல் நடைபெற்ற நூறுவது பிறந்தின வைபவங்களில் அன்னாரைப் பற்றி எழுதிய வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையே இத்துறையிற் தலை சிறந்தது. அரசாங்கம் இதனை ஆங்கில. சிங்கள தமிழ் ஆய மும்மொழிகளிலும் பிரசுரித்தது அருணாசலத்தின் வாழ்க்கை ஆய்வின்போது அருணாசலத்தின் நட்பறிஞராய விலியம்டிக்பியின் நூல வெளிப்பட்டது. இதனைத் தொடர்ந்து விலியம் சேர்ந்த டிட்பிக் கட்டுரைகளை அவர் ஈட்டிக்கொண்டார்.

நவீன சரித்திரமே அவரது தனிச்சிறந்த துறை ஆயின் தனிச் சிறந்த துறையினும் குறுகிய துறையை மட்

(5-ம் பக்கம் பார்க்க)

## புனித அந்தோனியார் திருநாள் இன்று

புனித அந்தோனியார் திருநாள் இன்று கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் நாடெங்கிலுமுள்ள அந்தோனியார் ஆலயங்களில் கூடி அவரடி வணங்கிப் பல வரம் வேண்டுகின்றனர்!

தமது வாழ்க்கைப் பயணத்தின் தொடக்கம் முதல் இறுதி வரை இறைவனையே துணையாய்க் கொண்டு இறையிலேயே நம்பிக்கை வைத்து இறைவனுக்காகவே துறவியாக வாழ்ந்து இறை தொண்டாற்றித் தூய வாழ்வு வாழ்ந்தவர் புனித அந்தோனியார்.

இறையருளில் அந்தோனியார் உயிருடன்வாழ்ந்த காலத்தில் மட்டுமன்றி இறந்தபின்னரும் செய்தார்! அளவிறந்த புதுமைகளைச் செய்தார்!

குருடனுக்கு பார்வையையும் செவிடருக்கு கேள்வியையும் இறந்தோருக்கு உயிரையும் நோயாளிகளுக்கு சுகத்தையும் கிடைக்க செய்தார்; காணாத பொருட்களைக் காட்டிக்கொடுத்தார்; பல இடங்களில் ஒரே வேளையில் காட்சி கொடுத்தார். இப்படி பலப் பல...!

நமது நாட்டில் கண்ணிருந்தும் குருடராக, காதிருந்தும் செவிடராக வாழ்பவர்களும் அப்படி மற்றவர்களை வாழச் செய்பவர்களும், உண்மைப் புலன் உணர்வு பெறவும்; எல்லா இடங்களிலும் எல்லா வேளையிலும் உண்மையான இறை சுதந்திர வாழ்வினைக் கண்டிடத்தக்கவகையில், புதிய உணர்வுகளையும், சிந்தனைகளையும் பெறவும், இறைவனிடம் அருள் பெற்றுத்தர வேண்டும் என்று புனித அந்தோனியாரை மன்றாடுவோம்!

எம். ஜே. வி. வரதராஜன்

# ★ பாப்பரசர் கொலைமுயற்சிக்கு சோவியத் ராஜதந்திரிகள் பணஉதவியுடன் ஒத்தாசை!

## 'அலிஅஜா' நீதிமன்றில் தகவல்

ரோம், ஜூன் 12

''பாப்பரசரைக் கொலை செய்வதற்கு சோவியத் ராஜதந்திரிகள் பண உதவி வழங்கி ஒத்தாசை புரிந்தனர்' என்று பாப்பரசரைக் கொலை செய்ய முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள அலி அஜா தெரிவித்தார்.

இத்தாலியின் ரோம் நகர நீதிமன்றமொன்றில் பாப்பரசர் கொலைமுயற்சி வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக் கெடுக்கப்பட்டது அப்போதே அலிஅஜா மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

துருக்கியைச் சேர்ந்த அலி அஜா கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் பாப்பரசரைக் கொலைசெய்ய முயன்றபோது கைதுசெய்யப்பட்டார்.

வத்திக்கானில் சென் பீட்டர்ஸ் சதுக்கத்தில் பாப்பரசர் பவனி வந்துகொண்டிருந்தபோதே இக்கொலைமுயற்சி இடம்பெற்றது சூட்டுக்காயங்களுடன் மயிரிழையில் பாப்பரசர் உயிர்தப்பினர்.

ரோம் நீதிமன்றத்தில் அலிஅஜா கூறுகையில் பல்கேரியாவிலுள்ள சோவியத் தூதரகத்தைச் சேர்ந்த மூன்று ராஜதந்திரிகள் பாப்பரசர் கொலைமுயற்சிக்கு உடந்தையாக இருந்ததாகவும் இதற்கெனத் தமக்கு 122 லட்சம் டாலர்கள் உதவிப்பணமாக வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்,

அந்த மூன்று ராஜதந்திரிகளில் ஒருவர் மட்டுமே இத்தாலியில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். ஏனைய இருவரும் பல்கேரியாவிலுள்ளனர்.

அலிஅஜா மீதான விசாரணைகள் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஆரம்பமாகியுள்ளன. சட்டத்தின்பிடியில் இவர் அகப்பட்டுள்ளபோதிலும் இரு வருடங்களுக்கு முன்னர் பரிசுத்த பாப்பரசர் இவரை இவரது சிறைக்கூடத்திலேயே சந்தித்து தம் மீதான கொலைமுயற்சியை மன்னித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (கி)

---

# இடம்பெயர்ந்த இவர்களிடம் விபரம் கோருகிறுர் அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரத்தில் ஏற்பட்ட அண்மைக்கால அசம்பாவிதங்களையடுத்து யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்து இங்குள்ள அரச திணைக்களங்களில் கையெழுத்திட்டுவரும் அரச ஊழியர்கள் தம்மைப்பற்றிய பின்வரும் விபரங்களை தமக்கு விரைந்து தந்துதவுமாறு அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1. இங்கு தாம் கையெழுத்திடும் திணைக்களம், கையெழுத்திடுபவர்களின் எண்ணிக்கை, பெயர்கள், பதவி போன்ற விபரங்கள்.

2. மே மாதத்துக்குரிய வேதனம் பெறப்பட்டு விட்டதா இல்லையா என்ற விபரம்.

3. கையெழுத்திடுவதில் இங்குள்ள திணைக்களங்களில் சிரமம் இருக்கின்றதா என்ற விபரம்.

---

# 'ஒளி — ஒலி'ப் பதிவுகளில் இந்திய வேதசாஸ்திரக் கருத்துக்கள்!

சென்னை, ஜூன் 12.

'ஒளி ஒலி'ப்பதிவுகளில் இந்திய வேதசாஸ்திர நன்னெறிக் கருத்துக்களைப் பேணிப்பாதுகாக்கும் திட்டமொன்று திருப்பதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நீண்ட பாரம்பரியமாக இந்தியாவில் உயர்ந்த வேதசாஸ்திரக்கருத்துக்கள் நூல்வடிவிலும் கர்ணபரம்பரையாகவும் வழக்கிலிருந்து வருகின்றன.

நவீன காலத்துக்கேற்ற வகையிலும், எதிர்காலச்சந்ததியினருக்குப் பயனளிக்கும் வகையிலும் 'ஒளி ஒலி'ப் பதிவுகளில் இவற்றைப் பாதுகாக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

தென்னிந்தியாவின் வேதசாஸ்த்திர மேதைகள் விற்பன்னர்கள் ஆகியோர் இப் புதிய திட்டத்தில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். திருப்பதி தேவஸ்தானத்தில் இம்முயற்சிக்கென இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்திய கல்வி அமைச்சர் கே. சி பந்த் இப்புதிய திட்டத்தை திருப்பதியில் ஆரம்பித்து வைப்பார். (கி)

---

# இன்றைய பலன்

மாதம்—வைகாசி-31

வாரம்—வியாழன்

திதி—தசமி காலை 9-38 மேல் ஏகாதசி

நக்ஷத்திரம் — ரேவதி பிற்பகல் வரை

மேடம்:- மோதவரும் பகை மோசடி நடக்கும் மனதில் அமைதி குன்றும் பணவிவகாரத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

இடபம்:- வீட்டில் சுப கருமங்கள் இடம் பெறும் பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் கைத்தொழில் புரிவர்களுக்கு நல்லவருவாயுண்டு.

மிதுனம்:- சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும் செய் தொழிலால் நஷ்டம் ஏற்படலாம் புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று சிலருக்கு நூதன ரோகம் ஏற்படலாம்.

கடகம்:- விளைபொருள் விருத்தியுடன் தாய்வழிச்சுகமும் உண்டு எதிர்காலவாழ்வுக்கான புதிய திட்டத்தை இன்று உருவாக்குவீர்கள் சிறப்பான தினம்.

சிங்கம்:- சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள் காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும் மகிழ்ச்சியான தினம்.

கன்னி:- போட்டி விவகாரங்களில் பணம்விரயமாகும் ஆணவப் போக்கில் சந்தர்ப்பம் நழுவவிடப்படலாம் எதிரிகள் மறைமுகதாக்குதல் நடத்துவார் பேலிடத்து அபிப்பிராய பேதங்கள் நடைபெறும்.

துலாம்:- பசுமையான சம்பவங்கள் நடைபெறும் களஸ்திரவழியால் நன்மைகள் கிடைக்கும் குடும்பத்தில் மகிழச்சிகரமான சூழ் நிலை தென்படும்.

விருச்சிகம்:- நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும் வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம் பொருட் செலவும் உண்டு.

தனுசு:- தெய்வ நம்பிக்கை மேலாங்கி நிற்கும் சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம் பொதுப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்களின் ஆதரவை பெறுவர்.

மகரம்:- தொழிற்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் மேலதிகாரிகளின் பாராட்டுக்களுக்கு இலக்காகுவீர்கள் சிலர்

(5ம் பக்கம் பார்க்க)

---

# தனியாருக்கு பெற்ரேல்

(யாழ்ப்பாணம்)

யாழ் ப. நோ. கூ. சங்க எரிபொருள் நிலையத்தில் நேற்றுக்காலை தனியார்களுக்கு பெற்ரேல் வழங்கப்பட்டது.

ஒருவருக்கு 5 லிற்றர் வீதம் சுமார் 800 லிற்றர் பெற்ரேல் வழங்கப்பட்டதாக யாழ். பலநோக்கு கூ. சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார். (ஈ)

---

# "பாடசாலைகளின் தரம் குறைய விரும்பமாட்டேன்"

## யாழ். கல்விப்பணிப்பாளர் உறுதி

(மானிப்பாய்)

''பாடசாலைகளின் தரத்தைக் குறைப்பதற்கு நான் ஒருபோதும் விரும்பமாட்டேன் பாடசாலைகளை வலயப்படுத்துவதால் திட்டமிடுவதற்கும் வசதி குறைந்த மாணவர்கள் உயர்கல்வியைப் பெறுவதற்கும்வாய்ப்பளிப்பதற்கும் வழி அமைக்கமுடிகிறது.''

இவ்வாறு யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில், பாடசாலைகளை வலயங்களாகப்பிரித்தல்சம்பந்தமான விளக்கத்தை அளிக்குமுகமாக கல்விப்பகுதியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் கூறினர்.

திரு சிமியாம்பிள்ளை மேலும் பேசுகையில்: இவ்வித திட்டம் பற்றி சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னரே சிந்திக்கப்பட்டது என்றும் இது கல்வித்துறையில்நல்லமாற்றத்தையே ஏற்படுத்துமென நம்பலாம் என்றும் எடுத்துக் கூறினர்.

அடுத்தவருடம்முதல் செயல்படுததப்படவிருக்கும்இப்பாடசாலை வலயங்கள் திட்டத்திலுல் சில பாடசாலைகளில் சில வகுப்புக்கள்சேர்க்கப்படலாம், சில பாடசாலைகளில் சிலவகுப்புக்கள் நீக்கப்படலாம் எனவும் மாணவர்களின் நன்மை கருதியே இவ்வாறு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி இக்கருத்தரங்கில் பேசுகையில்; யாழ்ப்பாண வலயத்தில் தற்போது 77 வீதமான மாணவர்களே கல்வி பயில்கின்றூர்கள்என்றும் உயர் வகுப்புக்கள் உள்ள பாடசாலை

(5-ம் பக்கம் பார்க்க)

---

# வெள்ளை மாளிகையிலேயே ரஜீவுக்கு அரச வரவேற்பு!

வாஷிங்டன், ஜூன் 13

அமெரிக்கா வந்துள்ள இந்தியப் பிரதமர் திரு ரஜீவ்காந்திக்கு அமெரிக்க அதிபரின் வெள்ளைமாளிகையிலேயே உத்தியோகபூர்வ வரவேற்பு வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டன.

திரு. காந்தி தமது குழுவினர் சகிதம் 11 மணி நேரப்பயணத்தின்பின்னர் அல்ஜீரியாவிலிருந்து அமெரிக்கா வந்தடைந்தார்.

இடைநடுவே கரீபியன் கடலில் உள்ள பேர்முடாதீவில் திரு. காந்தியின் விசேட விமானமான 'அன்னபூர்ணா' எரிபொருள் நிரப்புவதற்காகத் தரை இறங்கியது

பின்னர் இங்கிருந்தும் அவ்விமானம் அமெரிக்காவின் 'அன்ட்றூ' விமானப்படைத் தளத்தில் போயிறங்கியது இந்தியப்பிரதமரை அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ஸ் இங்கு வரவேற்றுர்.

இத்தளத்தில் ராணுவ அணிவகுப்போ, ஏனைய சம்பிரதாய வரவேற்புகளோ இடம்பெறவில்லை அறிமுகங்கள் மட்டும் செய்துவைக்கப்பட்டன.

இதனைபடுத்து ஹெலிகப்டரில் ரஜீவ்காந்தி வாஷிங்டன் பயணமானுர். வெள்ளை மாளிகை மைதானத்திலேயே திரு. காந்திக்கு சம்பிரதாய பூர்வ வரவேற்பளிக்கப்படும்

இராணுவ அணிவகுப்புடன் திரு. றீகனின் வரவேற்புரையும் அதற்குத் திரு. காந்தியின் பதிலுரையும் இங்கு இடம்பெறும்.

ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவ ஆக்கிரமிப்பு, பாகிஸ்தானுக்கு அமெரிக்க இராணுவ உதவி ஆகியன குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆராயவுள்ளார்கள் என்று கூறப்பட்டது. [கி]

---

# ஈராக் எல்லைப்பகுதிகளில் ஈரான் பீரங்கித்தாக்குதல்!

பக்தாத், ஜூன் 12

ஈராக்கின் பஸ்ரா நகர்பகுதி ஈரானின் மும்முரமான பீரங்கித் தாக்குதலுக்குள்ளானது.

இத்தாக்குதலில் இந்நகரும் இதனை அண்டிய ஏனைய ஈராக்கிய எல்லைப்பகுதிகளும் ஈரானிய பீரங்கிப் படைகளால் சேதமாக்கப்பட்டன.

ஈரான் இதுகுறித்து கருத்து வெளியிடுகையில், ஈராக்கின் பொருளாதாரம் மற்றும் வர்த்தக இலக்குகள் இத்தாக்குதலுக்கு இரையாகின என்று தெரிவித்தது.

இதேவேளை ஈராக்கிய விமானங்களும் தெஹ்ரான்மீது கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியான குண்டுவீச்சுக்களை நடத்தின. இதில் அவற்றின் கேந்திரப்பகுதிகள் சேதமாக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

---

A/L 87

(விஞ்ஞான பாடங்கள் மட்டும்)

ஆரம்பம்: 15-06-85

சனி காலை 9-30 மணி

(எமது வழமையான ஆசிரியர்கள்)

NEW MASTER INSTITUTE

B. M. C. Lane, Jaffna.

தூய, பிரயோக கணிதம்

திரு. நல்லையா

86, 87 புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 15-06-85

சனிக்கிழமை

விபரங்கட்கு:

New Master Institute

B. M. C. Lane, Jaffna.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



**நியூசாந்தி (மினி)**
யாழ் சாந்தி சினிமாவில்
10-30, 2-30
எம். ஜி ஆர், லதா, நம்பியார், அசோகன்
**நினைத்ததை முடிப்பவன்**
கலர் புதிய பிரதி

**குமரன் மினி**
சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30, 4-15
LADY CHATTERLEY'S LOVER
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**வின்ஸர்**
தினசரி 10-30, 2-00, 4-15
Yul Brynner
in
POPPY IS A FLOWER
போதைவஸ்துக் கடத்தும் பயங்கரக் கும்பல் ஒன்றை அம்பலமாக்கும் மர்மம், திகில் நிறைந்த சித்திரம்.

**யாழ். வின்சர் மினி**
தினசரி 10 30, 2-30
கமலஹாஸன் (இருவேடம்) ஸ்ரீதேவி, சுருளிராஜன், மனோகர், அசோகன், சீமா நடித்த
**சங்கர்லால்**

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
**சலங்கை ஒலி**
கடைசிவாரம்

**ஸ்ரான்லி மினி**
(சினிமா)
5'X5' திரையில்
10-30, 2-15, 4-15
DIVINE EMMANUEL
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**சிவன் மினி சினிமா**
K. K. S. ரோட், சிவன் கோயிலடி சந்திக்கு முன்பாக
11-6-85 முதல்
10-30, 12-30, 2-30, 4-30
JULIA
கண்டிப்பாக 18 வயதுக்கு உட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்.

**லிடோ** சினிமா
சுதாகர் - ராதிகா நடித்த
**ஆயிரம் வாசல் இதயம்**
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
16 30, 2-30
பாக்கியராஜ் - சரிதா நடித்த
**மௌன கீதங்கள்**
(ஈஸ்மன் கலர்)

## பணி பல புரிந்த பண்பு நிறை அதிபர்



**யாழ்.** இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திரு. செ. கனகரத்தினம் அவர்கள் நாளையுடன் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார் என்று எண்ணும் போது... அவருடன் சேவையாற்றியவர்கள்... அவரிடம் பயின்றவர்கள்... அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் நெஞ்சங்களில் ஏதோ 'சுருக்' என்று தைக்கத்தான் செய்கிறது!

கல்வி எனும் மங்காத, அணையாத ஒளிவிளக்கை எத்தனையோ பிஞ்சு உள்ளங்களில் ஏற்றி வைத்து ஒளி பரப்பி, எதிர்காலத்தைப் பிரகாசமாக்கச் செய்ய முடியும் என்பதை செயல் மூலம் காட்டியவர் யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை அதிபர் திரு செ. கனகரத்தினம் என்றால் மிகவும் பொருந்தும்

''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்றார் வள்ளுவர், திரு கனகரத்தினம் எல்லாவற்றையும் நல்லதாகவே நினைத்தார். செயல்பட்டார். இந்தச் செயலே இன்று யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் பெரும் வளர்ச்சி எனக் கூறலாம்!

வெறும் கற்பித்தலில் மட்டும் கவனம் செலுத்துவதோடு நின்றுவிடாது தமது பாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க முடியுமோ அதையெல்லாம் செய்து கொடுக்க முன்னின்று சலியாது உழைத்தவர் திரு. கனகரத்தினம். இப்பாடசாலையில் இவரது (1973—1985) பன்னிரண்டு வருடகாலப் பெரும்பணியில் பாடசாலை பலவித திருப்பங்களை, உயர்வுகளைக் கண்டது. இப்பாடசாலையிலிருந்து பல மாணவர் ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் களைப் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கொட்டிலாக இருந்த பாடசாலை இப்போது மாடிக்கட்டிடமாக உயர்ந்து நிற்கின்றது. சுமார் 300 மாணவர்கள் பயின்றுவந்த பாடசாலையில் இப்போது ஆயிரத்து இருநூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் பயில்கின்றார்கள். 36 ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள்.

அகில இலங்கையிலும் சிறந்த ஆரம்ப பாடசாலை என்ற பெயரை இப்பாடசாலை பெற்றுக் கொள்வதற்கு இவரது உழைப்பும் ஒரு காரணம் எனக் கூறினால் மிகையாகிவிடாது.

தம்முடன் சேவையாற்றிய சக ஆசிரியர்களுடன் மனம் கலந்துபேசி அவர்களது நல்ல ஒத்துழைப்பைப் பெற்று பாடசாலையை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாகயிருந்தவர் திரு. கனகரத்தினம். கணிதத்தில் சிறப்பான ஆற்றல் பெற்றுள்ள இவர் இசை, நடனக் கலாரசிகனும்கூட.

அகில இலங்கை ரீதியாக கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட இசை, நடன, நாடகப் போட்டிகளில் இந்து ஆரம்ப பாடசாலை தங்கப்பதக்கம் பெற்றது என்றால் இவரது உழைப்பும் அதில் கலந்து நின்றது என்பது சொல்லாமலேயே தெரியும். பேச்சுப் போட்டியில் கடந்த வருடம் இப்பாடசாலை மாணவருக்கு ஜனாதிபதிப்பரிசு கிடைத்ததும் இவரது உழைப்புக்கு ஒரு சான்று

கருமமே கண்ணாகி, கல்வியையே பெருநதனமாக்கி, மாணவர்களுக்கு வாரிவழங்குவதில் வள்ளல்தன்மை உடைய கனகரத்தினம் நாளை தமது பெரும் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார் என அறியும் போது இபபடியொரு சேவை மனோபாவம் கொண்ட ஒருவரை பாடசாலை அடைய எத்தனை நாட்கள் ஆகப் போகின்றன என்ற கேள்வியே எழுகின்றது

அன்னசத்திரம் ஆயிரம் கட்டலிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சாலச் சிறந்தது என்பதை நெஞ்சத்தில் ஆழமாகப் பதித்து மணவர் கல்விச் சேவையிலும் பாடசாலை வளர்ச்சியிலும் இரவு பகலாக ஈடுபட்டுவந்த திரு. கனகரத்தினத்தின் சேவையை கல்விக்கு மதிப்புக் கொடுக்கும் சமுதாயம் என்றுமே இலகுவில் மறந்துவிடாது.

கற்பித்தல் திறன், அடக்கம், அன்பு, பண்பான செயற்பாடுகளால் மாணவர்கள் சக ஆசிரியர்களால் மட்டுமல்ல பெற்றோராலும் மேலதிகாரிகளாலும் பெரிதும் மதிக்கப்பட்ட இவர்; இனிய சிறார் இதயந்தன்னில் எழிலான கதைகள் கூறி மகிழ வைப்பார் பாடசாலையில் தமிழ்ப் பண்பையும் சைவத்தையும் மிளிர வைத்ததுடன் சகல துறைகளிலும் சிறார் உயர வழி வகுத்தார். ஆசிரியத் தொழிலின் மகிமையை நிலைநாட்டிய பெருமை இன்று இவரையும் சாரும் என்றால் மிகவும் பொருந்தும்.

-'மாறு'

## இன்றைய

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம்.

கும்பம்:- பொருளாதார நிலை சீரடையும் சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு வெளியூரிலிருந்து செய்தியும் கிடைக்கும்

மீனம்:- இன்று எதிலும் நிச்சயமற்ற நிலைமை தென்படும் மனதில் விரக்திமனப்பான்மை தலைதூக்கும் உணர்ச்சிவசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## பாடசாலைகளின்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அண்மையில் இல்லாதிருப்பதுவும் இதற்கான காரணங்களில் ஒன்று எனக்கூறினர்.

அடுத்தவருடம் அமுல்நடத்தப்படவிருக்கும் இந்தத் திட்டத்தின் பிரகாரம் யாழ். வட்டாரத்தில் எந்த எந்தப் பாடசாலைகள் மாறுதல்களுக்குள்ளாகுமென்பதை யாழ் வட்டாரக்கல்வி அதிகாரி திரு இ. சிவானந்தன்விளக்கிக்கூறினார்.

யாழ்; கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த கல்லூரிகளின் அதிபர்கள் அபிவிருத்திச்சங்கசெயலாளர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

**லதா மினி**
(கோண்டாவில்)
10-30. 2 00 4-30
THE DAY OF THE JACKAL

S T L. மினிசினிமா
(திருநெல்வேலி)
காட்சி: 10-30. பி ப 2-30. 4-30
THE NEW BLCK EMMANUEL
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**மொடேர்ண் மினி சினிமா**
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை)
**நனா Nana**
இளம் உள்ளங்களை ஏங்க வைக்கும் காதல் காவியம்
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.

## அறிஞர்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

டும் விரும்பாது பல்நோக்காய் ஸ்ரீலங்காவின் புராதன மத்திய கால வரலாற்றையும் விரும்பி அவற்றிலும் அதே ஆர்வத்தைப் புலப்படுத்தினார்; திரித்துவக் கல்லூரியின் பிரேசர், பொலனறுவைப் பேருருவம், எல்லாளனின் கல்லறை போன்ற கட்டுரைகள் இந்நாட்டின் சகல சரித்திரகாலப் பகுதிகளையும் அவர் நன்கறிந்திருந்தார் என்பதை எடுத்துக்காட்டும்.

கௌரவங்கள் பல அணுகிய போதும் அவர் தான்பெற்ற மதிப்போடு வாளாவிருக்க விரும்பவில்லை. யாழ் நகரிலே ஈவிலின் இரத்தினம் சர்வகலாசாரஆய்வுத் தாபனத்தை அமைப்பதில் மிக்க முயர்சி எடுத்தார். அவரது அன்பு செறிந்த பாரியாரின் சடுதி மரணத்தின் பின் இதுவே அவர் நெடுநாளாய்க் கண்டகனவு. பல காலமாய்த் தான் இயற்ற விரும்பிய அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரனின் ஆய்வுக் கட்டுரை நூல் வேலையையும் ஆரம்பித்தார். தனக்கு நேரம் போதாது போய்விடுமோ என்னும் பீதியுடனும், கலாநிதிப் பட்டத்திற்கு உழைக்கும் இளம் மாணாக்கனின் ஊக்கத்துடனும் இக் கட்டுரை ஆராய்ச்சி வேலைகளை மிக இடர்பாட்டுடன் புரிந்தார். மின் துண்டிப்பு அடிக்கடி நிகழ்ந்து இன்னற்படுமிடத்து, தன் பூட்டப் பிள்ளைகளுடன் விளையாடி விட்டு ஏனைய மக்கள் நள்ளிரவிலே நன்றாய்த் தூங்கும் வேளையிலே னது நடுங்கும் வலக்கரத்தினால் மின்குளை ஏந்தி அடித்துக்கொண்டு மற்றக் கரத்தில் பிடித்திருக்கும் சாதனத்தை நடுயாமத்திலும் கூர்ந்து பார்க்கும் காட்சி விந்தையானதே. அந்தோ. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கலவரங்களினால் அவர் போற்றிப் புரியும் ஆக்கவேலைகள் கொடூரமாய்த் தாக்கப்பட்டுள்ளன.

தனது ஆய்வுகளை மிக நுணுக்கத்துடன்புரிபவர் அவற்றை நலனாய்வுக் கண்ணுடன் கூர்ந்து நோக்குபவர் அவற்றிற்நத் தம்மையே அர்ப்பணித்துள்ளார் ஜேம்ஸ் சொல்வள விற்பன்னர். அச்சொற்களஞ்சியத்தை அழகுடன் யாத்து எழுதுவார். உண்மையான சகல சர்வத்துவம் பெற்ற அறிவிலிருந்தே, அவரது ஆற்றொழுக்குப்போன்ற உரை நடை அமைப்பில் அவரது பேரறிவு ஆற்றல் செறிந்து விளங்குகிறது விந்தையான விளைவுகளை அவர்பெற்ற இந்நாளில் நாம் சேக்ஸ்பியரின் வசனங்களிலேயே அவர் போற்றற்குரியவர். தாங்கள் அறிவு மேதையே.

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இம்மாதம் 24ந் திகதி தேர்த்திருவிழாவும், 25ம் திகதி தீர்த்தமும் நடைபெறும்.

## ஆஸ்பத்திரிகளில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜூலை முதலாம் திகதி தொடக்கம் தமது கோரிக்கைகள் நிறைவேறும்வரை சட்டப்படி வேலைசெய்யும் இயக்கம் நடைபெறும் என்று தாதியர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

மேலதிக வேலைக்கான ஊதியம், பாதணிகள், முன்னர் வழங்கப்பட்ட நீலக்கோடு போட்ட வெள்ளைத்துணியிலான சீருடை ஆகியன வழங்கப்படவேண்டுமென்பதே தாதியர் விடுத்துள்ள மூன்று கோரிக்கைகளாகும். (மா)

QUICK TRAVELS
குயிக் ட்றவல்ஸ்,
யாழ்ப்பாணம்.

யாழ். மக்களின் நம்பிக்கையைப் பெற்று கடந்த ஒன்பது ஆண்டுகளாக நற்சேவை ஆற்றிவரும் குயிக் ட்றவல்ஸ் ஸ்தாபனத்தார் வழங்கும் நல்லதோர் வாய்ப்பு!

★ அதிவிரைவான பேர்லின் டிக்கட்டுகள். எங்களிடம் டிக்கட் பெறுபவர்களுடன் யாழ்ப்பாணம் தொடக்கம் AEROFLAT விமானம் ஏறும்வரை எங்கள் பிரதிநிதி உடன் சென்று சகல ஒழுங்குகளையும் கவனிப்பார்
★ மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்புப் பெறுவது பற்றிய ஆலோசனைகளைப்பெற எங்களுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்.
★ பாஸ்போட், BOND, RENEWAL, ENDORSEMENT, E C, INDIAN VISA, விமான டிக்கட்டுகள் போன்ற எல்லாத்தேவைகளுக்கும் எங்களை நாடுங்கள்.
★ தரமான நம்பிக்கையான எங்கள் சேவை என்றும் உங்களுக்கே!

நன்றி.

குயிக் ட்றவல்ஸ்
136, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.

ட்றேடெக்ஸ் ட்றவல்ஸ்
சிலிங்கோ மாளிகை,
முதல்மாடி,
கொழும்பு-1.

முக்கிய குறிப்பு: எமது ஸ்தாபனத்திற்கு யாழ்ப்பாணத்தில் வேறெந்தக் கிளை ஸ்தாபனமும் இல்லை.

3686

### இன்று ஆரம்பம்

# பனைவள ஆய்வும் கண்காட்சியும்

(கொழும்புத்துறை)

பல்கலைக் கழக மட்டத்தில் முதல் தடவையாகப் பனைவள ஆய்வுக்கருத்தரங்கும், கண்காட்சியும் இன்று ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன. இன்றுகாலை 9 மணிக்கு பேராசிரியர் கே. குணரத்தினம் யாழ். பல்கலைக் கழக மாணவர் பொதுமண்டபத்தில் திறந்துவைப்பார்.

15ம் திகதி சனிக்கிழமை காலை யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேராசிரியர் சு. வித்தியானந்தன், கைலாசபதி கலையரங்கில் ஆய்வு விரிவுரை, கருத்தரங்கை ஆரம்பித்துவைப்பார். பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு கே. நடராசா ஆரம்பஉரை நிகழ்த்துவார்.

பனை அபிவிருத்திச் சபைப் பொதுமுகாமையாளர் கலாநிதி சு மோகனதாஸ் (பனை அபிவிருத்திச் சபையின் தொழிற்பாடுகள்), உயிரியல் இரசாயனத்துறைப் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் (பனை பற்றிய கண்ணோட்டம்), பொருளியற்துறை பீடத்தைச் சேர்ந்த கலாநிதி வி. நித்தியானந்தன் (பனங்கைத்தொழில்-பொருளாதார ஆய்வு, புவியியல்துறைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (பனையின் நிலப்பயன்பாடு), கலைப் பீடாதிபதி என். பாலகிருஷ்ணன் [பனங்கைத் தொழில்-சமூக ஆய்வு) தாவரவியற்துறைப்பேராசிரியர் கலாநிதி சோ. சந்தையா (பனையின் இனப்பெருக்கமுறைகள் பற்றிய பரிசீலனை).

தாவரவியற்துறைப் பேராசிரியர் கே தெய்வேந்திரராஜா (பனையின் பதநீரும் - அதன் நொதித்தலும் சில அவதானங்கள்), இரசாயனவியல்துறைப் பேராசிரியர் எஸ். மகேஸ்வரன் (பனை சார்ந்த கைத்தொழில்கள்) ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

### குருநகர் அரிசிக் கொள்ளை:

# "ஏழைமக்கள் வயிற்றில் அடிக்கும் செயல்!"

### ப. நோ. கூ. ச. தலைவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணம் பகுதியில் உணவுக்களஞ்சியத்திலிருந்து 404 மூடை அரிசி கொள்ளையடிக்கப்பட்டது. ஏழைமக்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகும்'' என்று யாழ். தேசிய கூட்டுறவுச்சபை, தெல்லிப்பளை ப நோ. கூ. சங்கத் தலைவர் சி சிவமகாராஜா கவலை தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

''உணவுக்களஞ்சியத்தில் கைவைக்கப்பட்டுள்ள செயலால் பெரும் உணவுத்தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது இதுமட்டுமன்றி உணவுக்களஞ்சியத்தில் வேலைசெய்பவர்களும் பாதிப்படைவார்கள். இனிமேல் உணவுப்பொருட்கள் கொழும்பிலிருந்து கப்பல்மூலம் வர முடியாமலும் போய்விடும். யாழ். மாவட்டத்தில் உணவுப் பிரச்னை பூதாகாரமாகலாம்.

எனவே குருநகர் உணவுக் களஞ்சியத்தில் எடுக்கப்பட்ட அரிசியை திருப்பி ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்படும் உணவுப் பொருள் முக்கியமாக ஏழைமக்களுக்கு உணவுமுத்திரை மூலம் உணவுப்பொருட்களைப் பெறுபவர்களுக்குத்தான் கிடைக்கிறது. இதுஏழை மக்களுக்கே நட்டத்தையும் கஷ்டத்தையும் ஏற்படுத்தும் என்பதை சிந்திக்கவேண்டும், இச்செயல் ஏழைமக்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகும் ஆகவே ஏழைமக்களின் கண்ணீரைத் துடைக்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்'' (கி)

## மரணமானவர் கிளிநொச்சி அப்போதிக்கரி

(நமது கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சியில் கடந்த ஞாயிறு இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் அப்போதிக்கரி கே. தர்மகுலசிங்கம் [42 வயது] டலியானூர் [மலேரியாத் தடுப்பு பிரிவில் கடமையாற்றியவர் மரணமானதாக வெளிவந்த செய்தி தவறானது],

இவரது மரணத்திற்கு அஞ்சலி தெரிவித்த கிளிநொச்சி ஆஸ்பத்திரி ஊழியர்கள் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். ஆஸ்பத்திரியல் வெள்ளைக்கொடியும் பறக்கவிடப்பட்டுள்ளது.

## எக்கநாயக்கா தாக்கப்பட்டார்

(கொழும்பு)

இத்தாலிய விமானம் ஒன்றைக் கடத்தியமை தொடர்பாக கண்டி போகம்பறை சிறைச்சாலையில் இருக்கும் சேபால எக்கநாயக்கா அங்குள்ள சிறைக்காவலர்களினால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக அவர் பொலிஸ் மா அதிபரிடம் புகார் தெரிவித்துள்ளார் இதனைத் தொடர்ந்து ஏக்கநாயக்கா வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் இதுசம்பந்தமான விசாரணை ஒன்றுக்கு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

## செஞ்சிலுவைச் சங்கம் உதவி

(திருகோணமலை)

திருகோணமலையில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தேவையான துணி வகைகளை வழங்க முன்வந்திருக்கிறது.

## மீன்வாடி தீவைப்பு 4 பேர் காயம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள எல்லைக்காடு என்னும் பகுதியில் சந்தேகநபர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட ஆயுதப்படையினர் மீன்வாடி ஒன்றிற்குத் தீ வைத்தபோது பிரஸ்தாப வாடியில் மது போதையில் படுத்துறங்கிக் கொண்டிருந்த நால்வர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தின்போது தீயினால் காயமடைந்த கே. முருகையா (35 வயது) என்பவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏனையோர் முல்லைத்தீவில் சிகிச்சை பெறுவதாகவும் தெரியவந்தது.

## அதிபருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களிடமிருந்து பணம் அறவிட்டு பாதுகாப்பு சேவையை ஆரம்பிக்க முயற்சிசெய்த பாடசாலை அதிபர் ஒருவர் கல்வி அமைச்சரினால் எச்சரிக்கப்பட்டுள்ளார்

கொழும்பு மாவட்டத்தில் இருக்கும பிரபல பாடசாலையொன்றின் அதிபரே இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சட்டவிரோதமாக மாணவர்களிடமிருந்து பணம் சேகரிப்பது தொடர்பாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கல்வி இளைஞர், வேலைவாய்ப்பு அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா எச்சரித்துள்ளார்

## மினிபஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

இதுசம்பந்தமாக வவனியா பிரஜைகள் குழுதலைவர் சட்டத்தரணி என். எம். எச். சொர்ணபாலா வவனியா இணைப்பதிகாரி பிரிகேடியர் ஜெயவர்த்தனவுடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியதைத் தொடர்ந்து அவர் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததாகத் தெரிவிககப்படுகிறது

மினிபஸ்ஸில் சிங்களவர்களுடன் இரு இளம்பெண்கள் உட்பட நான்கு தமிழர்களும் பிரயாணம் செய்ததாகவும் அனுராதபுரம் நகரில் வைத்து ஊர்காவல் படையினரால் மினிபஸ் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டபொழுது தமிழ் இளைஞர் ஒருவரை விசாரணைக்காகத் தம்முடன் வைத்துக் கொண்டு மினிபஸ்ஸை புறப்பட அனுமதித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

மினி ஸ்களை ஊர்காவல் படையினர் சோதனையிடக்கூடாது என்று மேலிடம் அண்மையில் உத்தரவிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (மா)

## கச்சேரி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓய்வூதியம் பெறுபவர்களுககு எப்பொழுது அங்கு வைத்துப் பணம் வழங்கப்படும் என்று நாளை 14-ம் திகதி வெள்ளிக்கிழமை பத்திரிகைமூலம் அறிவிக்கப்படும் என்று யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார். (மா)

## மூதூரில்...

(1-பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் இடம் பெற்ற தெகிவத்தை மற்றும் சேருநுவர போன்ற பகுதிகளிலிருந்து சுமார் 5000 பேர் அகதிகளாக வெளியேறியுள்ளனர். இவர்கள் பாதுகாப்பான வேறு இடங்களில் தஞ்சமடைந்ததாக கூறப்படுகிறது.

### இனப்பிரச்னை தீர்வுக்கு

# தற்போதைய முயற்சிகளை மூன்று கட்சிகள் வரவேற்பு

(கொழும்பு)

''இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்காகத் தற்பொழுதுமேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளை வரவேற்கிறோம்'' என்று லங்கா சமசமாஜக் கட்சி சிறிலங்கா மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: இனப்பிரச்னை தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளையில் சகல தரப்பினரும் படுகொலைகளை உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும், பிரச்னைகளை தீர்ப்பதற்கு அவசியமான அரசியல் தீர்வு உடனடியாக காணப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை அரசாங்கம் சில விடயங்களில் தனது கொள்கைகளை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று இக்கட்சிகள் கேட்டுள்ளன. [ரா]

## யாழ். ஆஸ்பத்திரி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் இம்மருந்துவகைகளை ஜெயபாலசிங்கம் கம்பெனியினர் இலவசமாகக் கப்பல் மூலம் ஏற்றிவந்து காங்கேசன் துறைத் துறைமுகத்தில் ஒப்படைத்திருந்தது தெரிந்ததே.

முடங்கிக்கிடக்கும் மருந்து வகைகளை இன்று யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு வைத்திய அதிகாரி நச்சினார்க்கினியன் வாகன ஒழுங்கு வசதிகள் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சைக்கு உபயோகிக்கப்படும் பிராண வாயு சிலிண்டர் இல்லாததால் உயிர் ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளுக்குக்கூட சத்திரசிகிச்சை செய்ய முடியாமலிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால் சத்திரசிகிச்சை செய்வோருக்கு குறிக்கப்பட்ட தவணைகள் பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுவருகிறதாம்.

கடைசியாக கிடைத்த தகவலின்படி விமானமூலம்நேற்று மருந்துவகைகளும் பிராண வாயுச் சிலிண்டர்களும் பலாலிக்கு வந்துசேர்ந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது. [மா]

## உறுதியான...

[1ம் பக்கத்தொடர்ச்சி]

வன்செயல்களை நாம் வன்மையாக எதிர்ப்பதுடன் அரசியல் பிரச்னைக்கு வன்முறை ஏற்றதல்ல என்றும் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை நாம் வரவேற்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## வன்செயல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சரின் அறிக்கை மூலமாகவும், அரசுககுக்கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தும் பிரபாகரன் குழுவினர் தாக்குதல் நடத்த தீர்மானித்திருப்பது தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கிலும், கிழக்கிலும் வன்செயல்களை நிறுத்துமாறு இந்திய அரசும், இந்திய. தமிழ்நாட்டுத் தலைவர்களும் தீவிரவாதிகளை வற்புறுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. வன்செயல்கள் தணிந்த ஒரு நிலையில் தான் பிரச்னைகளுக்கு தீர்வு காணுவதற்காக பேச்சு நடத்த முடியும் என்பதனை இந்தியாவும் இலங்கையும் ஏற்றுககொண்டுள்ளன.

வடபகுதியில் தற்போது அமைதி நிலவுகிறது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் அசம்பாவிதங்கள் இடம்பெறுகின்றன இந்த கிழக்கு மாகாண அசம்பாவிதங்களுக்கு பிரபாகரன் தலைமையிலான புலிகள் இயக்கமே காரணமாக இருந்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

'யாலா' விலங்குகள் சரணாலயத்தில் தீவிரவாதிகள் தாக்குவார்கள் என்று பயந்து தான் அது மூடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## அத்துமீறி குடியேற்றம்

[யாழ்ப்பாணம்]

குருநகர் மேல்மாடி வீடமைப்புத்திட்டத்தில் வழங்கப்படாமலிருந்த 18 வீடுகளில் சிலர் அத்துமீறிக் குடிபுகுந்துள்ளதாகவும் அங்குள்ள விளையாட்டு மைதானத்தில் புதிய குடிசைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும், வீடமைப்புஅதிகார சபையினருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

குருநகர் மேல்மாடி வீடுகள் விநியோகத்தில் குறைபாடு உள்ளதாகச் செய்யப்பட்ட புகாரைத்தொடர்ந்து இந்த 18 வீடுகளும் பரிசீலனையின் பின் வழங்குவதற்காக இருந்ததெனக் கூறப்படுகிறது.

## பாதுகாப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

மூடைகள் பாதுகாப்புக்கருதி நாவற்குழியிலுள்ள உணவுக் களஞ்சியத்துக்கு எடுத்து செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இவ்வுணவுக் களஞ்சியம் கைதடி இராணுவ முகாமிலிருந்து சுமார் 50 யார் தூரத்தில் உள்ளது.

குருநகர் உணவுக்களஞ்சியத்தில் கொள்ளை அடிக்கப்பட்டது போக மீதியாக இருந்த அரிசி மூடைகளை நேற்றுத் தொடக்கம் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் பாதுகாப்பாளர்களுடன்சேர்ந்து பாதுகாத்துவருவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழை மக்களின் உணவுக் கஷ்டநிலையை உணர்ந்து அவர்களின் நன்மைகருதி கொள்ளை அடிக்கப்பட்ட அரிசி, சீனி மூடைகளை மீண்டும் ஒப்படைக்குமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். [மா]

## ஐந்து பேர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஐந்து இளைஞர்கள் அம்பாறை பொலிஸ் நிலையத்திற்கு ஜீப் பொன்றில் கொண்டு செல்லப்பட்டதாகவும், ஜீப்பில் இருந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரின் இயந்திரத் துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு ஜீப்பில் இருந்து தப்பி ஒடும்பொழுது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சந்தேசநபர்களை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தபோது ஐவரும் மரணமானதாகவும் கூறப்படுகிறது

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரின் இயந்திரத் துப்பாக்கியை தீவிரவாத சந்தேகநபர் ஒருவர் பறித்தெடுக்கும் பொழுது இன்ஸ்பெக்டருக்கு கையில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் ... வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81 Eelanadu ... Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126.